கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 62/2020

வாதி தரப்பு சாட்சி – 1 வேல்முருகன் திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 03.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>1,2 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. தாவா ஆ பட்டியல் சொத்தானது அமுதா என்பவருக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் மேற்படி அமுதா என்பவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. 2 ம் வாதி கிரையம் பெற்றது குறித்து எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். 2 ம் வாதி யார் யாரிடம் எந்த சொத்துக்களை எவ்வளவு விஸ்தீரனத்தில் கிரையம் பெற்றார் என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான். தாவா ஆ பட்டியல் சொத்து 2 ம் வாதிக்கு பாத்தியப்பட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் அதனை பொறுத்து நிரூபணம் செய்ய 2 ம் வாதி மட்டுமே இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க முடியும் என்றால் சரிதான். இவ்வழக்கை என்ன பரிகாரம் கோரி நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.42 ல் பாதை உள்ளது என்றும், அது எனக்கு பாத்தியப்பட்டது என்றும் கூறி தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி பாதை எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணங்கள் உள்ளது என்றால் எனது பத்திரத்தில் உள்ளது. மேலும் மாவட்ட ஆட்சியர் குளித்தலை சர்வேயருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் நகல் என்னிடம் உள்ளது. மேற்படி உத்தரவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி மனுவின் நகலை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி வாதிக்களுக்கு எதிராக எதிர் உரிமை கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர் உரிமை கோரிக்கையில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பாதையில் பாதை உரிமை உள்ளதாக கூறி தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கின் D பட்டியல் சொத்தானது 1ம் பிரதிவாதியால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான்.

3. நானும், 2 ம் வாதியும் கிரையம் வாங்கிய சொத்தில் வீடுகள் கட்டி குடியிருந்து வருகீறோம் என்றால் சரிதான். அதேபோல் 1ம் பிரதிவாதி கிரையம்

பெற்ற சொத்தில் வீடுகள் கட்டி அவர் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அ பட்டியல் சொத்தில் உள்ள வீடு ஏற்கனவே நான் கிரையம் பெறும் போது இருந்த வீடு என்றால் சரிதான். 2ம் வாதி அமுதா கிரையம் பெற்ற சொத்தில் ஏற்கனவே வீடு இருந்ததா என்றால் குடிசை வீடு இருந்தது. 2ம் வாதி கிரையம் பெற்ற பின்னிட்டு அதனை இடித்து கெட்டி மெத்தை வீடு கட்டியுள்ளார். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் இருந்த பழைய வீட்டை அவர் கிரையம் செய்த பின்னிட்டு இடித்துவிட்ட புதியதாக ஒரு வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அ பட்டியல் சொத்திற்கு எந்த பக்கம் 2ம் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் கிழக்கு புறம் உள்ளது. எனது வீட்டிற்கும் 2ம் வாதியின் வீட்டிற்கும் இடையே பொதுசுவர் உள்ளதா என்றால் இல்லை. பாதை உள்ளது.

4. மேற்படி பாதையானது யாருடைய சொத்தின் கீழ் வருகிறது என்றால் எனது சொத்தின் கீழ் வருகிறது. 2ம் வாதி அவருடைய அத்து வரை வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். 2ம் வாதி வீட்டின் மேல்புறம் அத்தில் உள்ள சுவரில் சன்னலோ, கதவோ வைத்துள்ளாரா என்றால் இல்லை. எனது வீட்டிற்கும் 2ம் வாதி வீட்டிற்கும் தென்புறம் உள்ளது தான் C பட்டியல் பாதை என்றால் சரிதான். மேற்படி C பட்டியல் பாதையின் தென்புறம் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி C பட்டியல் பாதையானது கீழ்புறமாக வந்து கீழ்புறம் தென்வடலாக உள்ள காவல்காரன்தெருவில் சென்றடைகிறது என்றால் சரிதான். மேற்படி காவல்காரன்தெரு சுமார் 30 அடி அகலம் கொண்ட தெருவாக இருக்கும் என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**